3 பாடம்

# மீண்டும் ஓடுதல்

**உன் வீட்டாருடன் நீ உணவகத்தில் (ஓட்டலில்) சாப்பிட்டதுண்டா? உணவு பரிமாறுபவர் உங்களை நன்றாகக் கவனித்தாரா? சாப்பிட்டுவிட்டு வரும்போது அவருக்குப் பணம் கொடுத்துண்டா? நமக்கு உதவுகிற நபரை நாமும் நன்கு கவனிக்கவேண்டும்.**

லாபானின் வீட்டிற்கு யாக்கோபு வந்து 20 வருடங்களாகிவிட்டது. யாக்கோபிற்கு இப்பொழுது 10 பிள்ளைகள் இருந்தனர்.

யோசேப்பு பிறந்த பின்னர் கானான் தேசத்திற்குப் போக லாபானிடம் யாக்கோபு அனுமதி கேட்டார். ‘‘உன்னாலே தான் என்னையும் தேவன் ஆசீர்வதித்துள்ளார்; எனவே நீ என்னோடேயே இரு என்னைவிட்டுப் போகக் கூடாது’’ என்று லாபான் கெஞ்சினான்.

யாக்கோபு செய்யும் வேலைகளுக்கு இனி ஒழுங்காகச் சம்பளம் தருவதாகவும் லாபான் கூறினான். யாக்கோபு சம்மதித்தார். யாக்கோபைத் தேவன் ஆசீர்வதித்ததினால் அவனது செல்வம் மிகவும் பெருகியது.

யாக்கோபு மேலும்மேலும் பணக்காரனாவது லாபானுடைய பையன்களுக்கும் மிகவும் பொறாமையாக இருந்தது; எரிச்சலடைந்தார்கள். லாபானுக்கும் எரிச்சலாகத்தான் இருந்தது. ஆதி 31:2. தன்மேல் அவர்கள் பொறாமையுடன் இருப்பதை யாக்கோபு நன்றாக உணர்ந்தார். தேவன் யாக்கோபிடம், ‘‘நீ உன் சொந்த தேசத்திற்குப் போ’’ என்றார். ஆதி 31:13. ஊருக்குப் போவதற்கான சரியான நேரம் இது தான் என்று யாக்கோபு உணர்ந்தார். தனது மனைவிகளையும் பிள்ளைகளையும் பொருட்களையும்



## மனன வசனம்

**எதைச் செய்தாலும், மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

**கொலோசெயர் 3:24.**

ஆடுகளையும் தனக்குச் சொந்தமான பொருட்கள் யாவற்றையும் எடுத்துக்கொண்டு கானான் தேசத்திற்குப் புறப்பட்டார். லாபானிடம் ஒன்றும் சொல்லவில்லை. எனவே, லாபான் கோபத்துடன் தன் சகோதரர்களைக் கூட்டிக்கொண்டு யாக்கோபைத் துரத்தி வந்தான். ஏழுநாட்கள் கழித்து யாக்கோபைக் கண்டுபிடித்தான். ஆனால், யாக்கோபுக்கு எந்தத் தீங்கும் செய்யக்கூடாதென்று தேவன் லாபானைச் சொப்பனத்தில் எச்சரித்திருந்தார்.

எனவே லாபான், ''நீங்கள் யாவரும் இப்படிச் சொல்லாமல் வந்தது ஏன்?'' என்று மட்டும் கேட்டான்.

அதற்கு யாக்கோபு, ''இந்த 20 வருடகாலமும் நான் உம்மிடம் உண்மையும் உத்தமுமாய் வேலைசெய்தேன்; உமக்கு எந்த ஒரு நஷ்டமும் நேரிடாதபடி பார்த்துக்கொண்டேன். 14 வருடம் உம்முடைய பிள்ளைகளுக்காக வேலைசெய்தேன். பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். என் தேவன் என்னுடனே இல்லாதிருந்தால், நீர் என்னை ஒன்றுமில்லாமலே அனுப்பி இருப்பீர். உம்மிடத்தில் சொன்னால் அனுப்பமாட்டீர் என்று தான் உம்மிடம் சொல்லாமல் வந்தோம்'' என்றார்.

லாபானால்ஒன்றும் சொல்ல முடியவில்லை. எனவே, ''நீ என் குமாரத்திகளைத் தவிர வேறு பெண்களைத் திருமணம் செய்யக்கூடாது; நான் இந்தக் கற்குவியலைக் கடந்து உனக்குத் தீங்குசெய்ய வரமாட்டேன்'' என்று கற்களைக் குவித்து உடன்படிக்கை செய்தனர்.

தேவனுக்குப் பலியிட்டு, விருந்து சாப்பிட்டு, அவரவர் தேசத்திற்குப் புறப்பட்டனர்.

'தேவன் உனக்கும் எனக்கும் சாட்சி' என்று சொல்லியதால் அந்தக் கற்குவியல் 'மிஸ்பா' எனப்பட்டது.



## செய்தி

**அன்பினால் செய்யப்படுகிற சேவை,**
**பிரதிபலனை எதிர்பார்க்காது.**

தன் இளவயதில் யாக்கோபு தன் அண்ணன் ஏசாவிடம் சிவப்பான கூழைக் கொடுத்து சேஷ்ட புத்திரபாகத்தைப் பெற்றுக் கொண்டான். தன் அப்பா ஈசாக்கையும் ஏமாற்றி, அண்ணன் ஏசாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றான்.

அவ்வாறு ஏமாற்றியதால், இளமைப்பருவத்திலேயே தன் அன்பான பெற்றோரைப் பிரிய நேர்ந்தது. ஏசாவின் கோபத்துக்கும் உள்ளானான். தான் ஏமாற்றியதுபோல் தன் மாமாவால் ஏமாற்றப் பட்டான்.

ஆனாலும், யாக்கோபு மன்னிப்புக் கேட்டதால், தேவன் யாக்கோபை ஆசீர்வதித்தார்.

தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்.

### செய்முறை:

*மிஸ்பா என்பதின் பொருள் அறிய, எழுத்துக்களில் இரண்டாவது எழுத்துகளை வெட்டிவிடு. மீதியைக் கோட்டில் எழுது.*

